செய்தி வெளியீடு எண்: 104　　　　　　　　　　நாள்: 30–01–2012.

# செய்தி வெளியீடு

## சென்னை, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு குறித்த குறும்படம் நாள் முழுவதும் திரையிடப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் அண்ணல் காந்தியடிகளின் 65–ஆவது நினைவு நாள் நாடு முழுவதும் இன்று ( 30.01.2012 ) அனுசரிக்கப்பட்டு வருகிறது. மேலும், அண்ணல் காந்தியடிகளின் நினைவினைப் போற்றிடும் வகையில் சென்னை, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு குறித்த திரைப்படம் மற்றும் அண்ணல் காந்தியடிகளைப் பற்றிய உரை அடங்கிய குறும்படம் திரையிடப்பட்டது.

இத்திரைப்படம் அண்ணல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காச் சிறையில் அவதியுற்றது, சபர்மதி ஆசிரம வாழ்க்கை, தீண்டாமைக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தது, இந்திய நாடு சுதந்திரம் அடைந்தது பற்றிய அண்ணல் காந்திடிகளின் பல்வேறு கருத்துகள் அடங்கிய படம் ஆகும்.

அண்ணல் காந்தியடிகளின் உரை மற்றும் கருத்துக்கள் அடங்கிய திரைப்படம் இன்று ( 30.01.2012 ) நாள் முழுவதும் காந்தி மண்டபத்தில் திரையிடப்பட்டது. இத்திரைப்படத்தினை காந்தி மண்டபத்திற்கு வருகை புரிந்த ஏராளமான பொதுமக்கள்,இளைஞர்கள் மற்றும் பள்ளி மாணவ/மாணவிகள் பார்த்து பயனடைந்தனர்.

********

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.